**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**
**C.C.No. 07/2020**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–06, திரு.மனோகரன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மனோகரன் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | ராமர் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW 04 / PW06 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் அணைக்குடத்தில் வசித்து வருகிறேன். நான் பால்பண்ணை வைத்துள்ளேன். அசா1 எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நான் பால்பண்ணைக்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

கடந்த 24.06.2019ம் தேதி காலை 07.30 மணியளவில், கவிதா தனது வீட்டிற்கு அருகிலுள்ள மாட்டு கொட்டாய்க்கு சென்று மாடுகளை அவிழ்த்துவிட்டு வந்தபோது, எதிரி முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, நீ என்னடி உன் ஆர்.எஸ்.பதி தோப்பு எரிந்ததற்கு என்னை திட்டுகிற குச்சிகாரி தேவிடியா என்று திட்டிக்கொண்டே தனது கையில் வைத்திருந்த கட்டை கழியால் அசா1ஐ தலையில் அடித்ததில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதை பார்த்த அசா1ன் கணவர் தடுத்தபோது, அவரையும் அடித்தார் என்றும், அங்கிருந்து செல்லும்போது, இருவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டுச் சென்றார் என்றும், அசா1, அவரது கணவரும் ஜெயங்கொண்டம் அரசு

மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சையில் இருந்தார்கள் என்றும், தான் மேற்சொன்ன சம்பவங்களை நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது அரசு தரப்பிலிருந்து விலகி, எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை

உண்மை நகல்/

ஓம்/–S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.